# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – IV

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 10.09.2015 காலை 9.30 மணி

சமுகமளித்தோர்:-

- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- பிரதம கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- உதவிச் செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர் கல்விப் பணிப்பாளர்கள்(யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி,தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி,துணுக்காய், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார், மடு)
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் , மாகாணக் கல்வித் திணைக்களம்.
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- கணக்காளர்கள்(கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி,தீவகம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய்,வவுனியா தெற்கு,மன்னார், மடு )
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்,வலிகாமம்,வடமராட்சி, தீவகம், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, கிளிநொச்சி,முல்லைத்தீவு, துணுக்காய், மடு)
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வித் திணைக்களம்)
- ஒருங்கிணைப்பாளர், ESDP, மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- நிர்வாக உத்தியோகத்தர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம்)
- பாடசாலை வேலைகள் பரிசோதகர்கள்
- தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்.
- நிதி உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு கடைசியாக சென்ற மாகாண மட்ட கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜூலை மாதம் 24 ஆந் திகதி நடைபெற்றது. ஆகஸ்ட் மாதக் கூட்டமானது க.பொ.த(உ/த) பரீட்சை நடைபெற்ற காரணத்தினால் இன்று நடைபெறுகின்றது. சென்ற கூட்ட அறிக்கையானது வாசிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அடுத்த விடயங்களிற்கு செல்லலாம்.

சென்ற கூட்டத்தில் வேலை முன்னேற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இந்த வேலைகளை முடிப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், பாடசாலை வேலைகள் பகுதி பொறியியலாளர்கள் ஆகியோர் கூடிய கவனமெடுத்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருந்தோம். ஆனால் வேலை முன்னேற்றம் (Progress) தொடர்பில் பார்ப்போமாயின் குறைவான முன்னேற்றமே (Progress) காணப்படுகின்றது. அந்த வகையில் PSDG திட்டத்தில் 323 Mn மொத்தமாக 20 Mn அமைச்சிற்கும் 265 Mn திணைக்களத்திற்கும் 06 Mn கலாசாரத் திணைக்களத்திற்கும் 19 Mn விளையாட்டுத் திணைக்களத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் 8% ஆன வேலைகளே முடிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் ஒரு பின்தங்கிய நிலை. சென்ற செவ்வாய்க்கிழமை முதலமைச்சர் தலைமையில் ஒரு மீளாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் கல்விசார் துறை மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. நாம் இந்த டிசெம்பர் மாதத்திற்குள் முடிப்போம் என்று கூறியும் அதனை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த வேலைகள் இந்த வருடத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற இறுக்கமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனவே எந்த விதமான நிதியினையும் அடுத்த வருட வைப்பில் வைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

அதேவேளை 2016 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு (Budget) இவ்வளவு காலமும் உதவுதொகையாக (Grant) வந்த பாதீடு (Budget) மீண்டும் மாற்றப்பட்டு ஒதுக்கீடாக (Allocation) தரப்படுகின்றது. ஆகவே இவ்வளவு காலமும் வந்த காசை திருப்பி அனுப்புவதில்லை. டிசெம்பர் 31 இலும் இருக்கின்ற காசை உதவுதொகை (Grant) என்ற படியால் மாகாண சபைக்குரிய காசாக செலவளிக்கப்பட்டது. ஆனால் இனி அவ்வாறு செய்ய முடியாது. அடுத்த வருட நிதி செயற்பாடுகள் டிசெம்பர் 31 இற்குள் முடிக்கப்பட்டதும் மீண்டும் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டு அடுத்த வருடத்திற்கு மீண்டும் செலவிற்காக எடுக்கப்பட வேண்டும். எனவே வேலை முன்னேற்றம் தொடர்பில் ஒவ்வொரு வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும். விசேட பொறிமுறையை எடுத்து மூன்று மாத காலப் பகுதிக்குள் முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பல பிரச்சினைகள் இங்கு காணப்படுகின்றது. முன்னேற்ற அறிக்கை (Progress Report) முறையாக தரவேற்றம் (Update) செய்யப்படுவதில்லை. அடுத்து Imprest எடுப்பதற்கு புகைப்படங்கள் தேவை. அவை கூட ஒழுங்காக கிடைப்பதில்லை. அடுத்து கொடுப்பனவுகளும் (Payment) தாமதமாகின்றது. தயவு செய்து இந்த வருடத்தில் கொடுக்கப்பட்ட வேலைகளை முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு வலயக் கல்விப் பணிப்பாளரின் அறையிலும் ஒவ்வொரு வேலைகளுக்குமுரிய ஒதுக்கங்கள் (Allocation), செலவினம் (Expenditure) தற்போது வேலைத்தளத்தில் (Worksite) இல் எத்தனை பேர் வேலை செய்கின்றனர் என ஒவ்வொரு நாளும் தரவேற்றம் (Update) செய்தல் வேண்டும். ஒவ்வொரு வேலைப் பட்டியலின் கீழும் அந்தந்த வேலையை செய்யும் ஒப்பந்தகாரரின் தொலைபேசி இலக்கங்களும் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு

நாளும் ஒப்பந்தகாரருடன் தொடர்பு கொண்டு வேலைத்தளத்தில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்து சென்ற கூட்ட அறிக்கையையும் அதனுடைய முன்னேற்றங்களையும் பார்க்கலாம்.

- ❖ 2016 ஆம் ஆண்டிற்குரிய PSDG வேலை தொடர்பில் ஏற்கனவே பார்த்துள்ளோம்.
- ❖ துணுக்காய் வலயம் மாதிரி வலயக் கல்விப் பணிமனையை நன்றாக செய்திருப்பதாக செயலாளர் அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.
- ❖ சென்ற கூட்ட அறிக்கையை வாசித்து ஏற்றுக்கொண்டு அடுத்த விடயமாக முன்னேற்ற அறிக்கை (Progress Report) பற்றி ஆராயப்பட்டது.
- ❖ கௌரவ மாகாணசபை உறுப்பினர்களின் நிதி (CBG) தொடர்பில் ஆராயப்பட்டது. கௌரவ மாகாணசபை உறுப்பினர்களினால் 24.9Mn ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 258 வேலைகளில் 123 வேலைகள் மாத்திரமே செய்து முடிக்கப்பட்டுள்ளது.

➢ அடுத்து PSDG திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது.

- ❖ யாழ்ப்பாண வலய தொழிநுட்ப உத்தியோகத்தரினால் வேலை மேற்பார்வையாளர்கள் இல்லையென்று முறைப்பாடு செய்யப்பட்டது. அதற்கு 01.09.2015 முதல் புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.
- ❖ கொடுப்பனவு தொடர்பில் உறுதிச்சிட்டைகளை (Bills) ஆய்வு (Check) செய்வதற்கு முன்னர் படத்தையும் கோரிக்கையினையும் அனுப்பினால் பிரதம செயலாளரிடமிருந்து நிதியினை கோர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.
- ❖ கல்வி திணைக்களத்தினால் இனி வருங்காலங்களில் லிங்கம் ஒப்பந்தகாரருக்கு இனி எதுவித ஒப்பந்தங்களும் கொடுப்பதில்லையென தீர்மானம் எடுக்கப்பட்டது. தங்களுடைய வேலை முன்னேற்றத்தில் எதுவித முன்னேற்றமும் காணப்படாத காரணத்தினால் இனி எதுவித ஒப்பந்தங்களும் வழங்கப்படமாட்டாது என கடிதம் அனுப்பப்பட வேண்டும்.
- ❖ அடுத்து Child Fund வேலைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

➢ அடுத்து திட்டமிடல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

- ❖ 34 கோட்டக் கல்வி அலுவலகத்திற்கும் தனியான கட்டடம் கட்டுவதற்கு அதற்குரிய மதிப்பீடு(Estimate) திட்டம் (Plan) என்பவற்றை தருதல் வேண்டும்.
- ❖ LMDU ஆளணி தொடர்பாகவும் கல்வி சாரா ஆளணி தொடர்பாக தொழிநுட்ப ஆய்வுகூடத்திற்கு இருவரும் தொழிநுட்பபீடத்திற்கு மூன்று பேரும் உதவியாளர்களாக நியமிக்கப்படலாம்.

- ❖ தொழிநுட்ப பாட ஆசிரியர்களிற்கு பற்றாக்குறை நிலவுகின்றது. இது சம்பந்தமாக நேர்முகத் தேர்வு இன்னும் நடக்கவில்லை.
- ❖ ஓய்வூதியம் தொடர்பாக சுற்றறிக்கைக்கு அமைவாக பிரதேச செயலகங்களினால் ஓய்வூதியங்கள் மறுசீரமைக்கப்பட்டு வழங்கப்படும்.
- ❖ முறைசாராக் கல்வி தொடர்பாக க.பொ.த(உ/த) பரீட்சை எழுதியவர்களிற்கு ஏதோவொரு வகையில் பயிற்சி வழங்க வேண்டும்.
- ❖ பொதுப் பரீட்சை தொடர்பாக தரம் 06 -11 வரையும் தரம் 03 – 05 வரையும் இறுதித் தவணைப் பரீட்சை ஐந்து பிரதான பாடங்களிற்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும்.
- ❖ அடுத்த வருடம் க.பொ.த(உ/த) பரீட்சை எழுதும் மாணவர்கள் ஜீன் மாதம் வரை பாடசாலைக்கு சமுகமளித்தல் வேண்டும்.
- ❖ தனியார் கல்வி நிலையங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- ❖ பாடசாலை சுகாதார விடயம் தொடர்பாக அனுப்பப்பட்ட சுற்றறிக்கையினை கட்டயமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
- ❖ E- lession ஊடாக LMDU இன் மூலம் முன்னணி ஆசிரியர்களைக் கொண்டு தரம் 06 மாணவர்களிற்கான கணித பாடத்திற்கான முன்வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.
- ❖ RIMP இனுடைய 138 சிபாரிசுகள் அனுப்பிவைக்கப்பட்டன. சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- ❖ சிறுவர் பாராளுமன்றத்தினை ஒரு கோட்டத்தில் ஒன்றையாவது நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- ❖ ஆசிரிய வள நிலையம் (CRC Center) முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

➢ அடுத்து நிதி விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

- ❖ தளபாடத் திருத்தம் காசு தரப்பட்டது. தளபாடத் திருத்தத்தினை மேற்கொண்டதாக தெரியவில்லை.
- ❖ Asia Foundation புத்தக விநியோகம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு 96 பாடசாலைகளிற்கு வழங்கப்படும்.
- ❖ ஆரம்ப பாடசாலைகளில் மாதிரிப் பாடசாலையை உருவாக்கப்பட வேண்டும்.
- ❖ மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி 26, 27 ஆந் திகதிகளில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

❖ யோகா நிகழ்ச்சித் திட்டத்தினை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

# பிரச்சினைகள், பிரேரணைகள் தொடர்பான கலந்துரையாடல்.

| இல | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | தீர்மானம் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. | ஆசிரியர்களின் பதவியை உறுதிப்படுத்தல் தொடர்பாக | ஆசிரியர்களின் பதவியை உறுதிப்படுத்தல் தொடர்பாக ஏற்கனவே அனைவருக்கும் அறிவித்துள்ளோம். மன்னார் வலயத்தில் சில பிரச்சினைகள் எழுந்துள்ளது. சுற்றுநிருபத்திற்கு முரணாக உள்ளீர்ப்புக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளது. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 02. | ஆசிரிய சம்பள நிலுவை தொடர்பாக | ஆசிரிய சம்பள நிலுவை தொடர்பாக 322 Mn இற்கு கோரிக்கை வந்துள்ளது. அதனை நாம் சமர்ப்பித்துள்ளோம். அதிபர்களுடைய சம்பள நிலுவை சம்பந்தமாக 60 Mn கேட்டுள்ளோம். அந்த 60 Mn இந்த மாதம் கிடைக்குமென நம்புகின்றோம். | |
| 03. | ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பாக | ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பாக உள்ளீர்ப்பு செய்யப்பட்ட பின்னர் பதவியுயர்வு வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. தற்போது உள்ளீர்ப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளது. 01.07.2008 இற்கு பின்னர் நியமனம் வழங்கப்பட்டவர்களிற்கு பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக நியமனக் கடிதங்கள் மாற்றி வழங்குகின்ற செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. 1863 விண்ணப்பங்கள் குறைபாடுடையவை என திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவற்றை மீண்டும் திருத்தி அனுப்பிவைக்கும்படி தெரிவிக்கப்பட்டது. அடுத்ததாக உள்ளீர்ப்பு முடிவடைந்ததும் பதவியுயர்வு இம் மாதம் 30 ஆந் திகதிக்குள் செய்து முடிக்கப்பட வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 04. | சுயவிபரக்கோவை தரவேற்றம் செய்வது தொடர்பாக | சுயவிபரக்கோவை தரவேற்றம் செய்வது தொடர்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு வலயங்களிற்கு அழிவடைந்த சுயவிபரக்கோவைகளை Scan செய்வதற்கு | |

| | | | |
|---|---|---|---|
| | | கேள்வி கோரல் மூலம் வழங்குதல் வேண்டும். முல்லைத்தீவு, கிளிநொச்சி வலயங்களின் வேலைகள் செய்து முடிக்கப்படாது உள்ளதென தெரிவிக்கப்பட்டது. முல்லைத்தீவு வலயத்திற்கு ஒரு நடமாடும் சேவை மூலம் அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 05. | மனித வள அபிவிருத்திக்கு (HRD) ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பாக | மனித வள அபிவிருத்திக்கு (HRD) ஒதுக்கப்பட்ட நிதி முடிக்கப்படாது உள்ளது. மாகாணக் கல்வித் திணைக்களம் அந்த நிதியில் பரீட்சைகளை அல்லது இலவசமாக குறைந்த புள்ளிகளை பெறும் மாணவர்களுக்கு புத்தகங்களை அடித்து கொடுக்கலாம். பல வலயங்களும் பயிற்சி வழங்காது உள்ளன. மனித வள அபிவிருத்திக்கான மொத்த ஒதுக்கம்(Allocation) 28.6Mn ஆக காணப்படுகின்றது. ஆனால் மொத்த செலவினமானது 4.6 Mn ஆக காணப்படுகின்றது. 24 Mn செலவழிக்கப்படாது உள்ளது. மூன்று மாத காலத்தினுள் செய்து முடிக்கப்பட வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள். |
| 06. | வேலை அட்டவணை (Gantt Chart) தொடர்பாக | அனைத்து தொழிநுட்ப உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு ஒப்பந்தகாரருடனும் வேலை அட்டவணை (Gantt Chart) தயாரித்து ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலப்பகுதியில் வேலை முடிவடையாது விட்டால் வேலையாட்களின் எண்ணிக்கையை கூட்டி வேலையை முடிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் |
| 07. | 5 Year Plan தொடர்பாக | 5 Year Plan தொடர்பில் அனைத்து வலயங்களும் தயாரித்து அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டது. அதனை தொகுத்து அனுப்பி வைக்க வேண்டும். அடுத்து மாவட்ட அபிவிருத்தி திட்டம் (District Development Plan) தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சிற்கு அனுப்புதல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 08. | ஜப்பான் | ஜப்பான் தூதுவராலயத்தினால் பகுதியளவில் | சகல வலயக் கல்விப் |

| | | | |
|---|---|---|---|
| | தூதுவராலயத்தினால் பகுதியளவில் முடிக்கப்படாத அல்லது வேறு ஏதாவது திட்டத்தில் செய்து முடிக்கப்படாத பாடசாலைக் கட்டடங்கள் தொடர்பாக | முடிக்கப்படாத அல்லது வேறு ஏதாவது திட்டத்தில் செய்து முடிக்கப்படாத பாடசாலைக் கட்டடங்களை கட்ட முன்வந்துள்ளார்கள். போக்குவரத்திற்கு அண்மையாக உள்ள, மாணவர்களின் எண்ணிக்கை உயர்வாக உள்ள பாடசாலையின் விபரங்களை தந்தால் அவர்களிற்கு கொடுத்து அதனை கட்டி முடிக்க முடியும். | பணிப்பாளர்கள் |
| 09. | ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் இரண்டு பாடசாலைகளை எல்லா வசதிகளுடனும் சிறந்த பாடசாலையாக உருவாக்குவது தொடர்பானது | ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் இரண்டு பாடசாலைகளை எல்லா வசதிகளுடனும் சிறந்த பாடசாலையாக உருவாக்க அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்தும் பாடசாலைகளின் பெயர்கள் பெறப்பட்டது. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 10 | அதிபர்களின் பதவியுயர்வு | அதிபர்களின் பதவியுயர்வு சம்பந்தமாக கடிதம் ஒன்று அனுப்பப்படும். அதிபர்களின் நியமனம் தொடர்பாக பதவியுயர்வு கிடைக்கப்பெற்ற அதிபர்களிற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இனி வெற்றிடம் உள்ள பாடசாலைகளிற்கு விண்ணப்பங்களை கோரப்பட்டு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு மாகாணக் கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 11. | ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக | ஆசிரியர்களின் இடமாற்றம் 01.01.2016 ஆந் திகதி நடைமுறைப்படுத்த வேண்டும். ஆகவே அதற்குரிய விண்ணப்பங்களை கோரி வலய மட்ட இடமாற்ற சபை நடந்திருக்கும். ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளையும் இடமாற்ற சபையில் அனுமதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.இடமாற்றத்திற்கு தகுதி பெற்றவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்பதில்லை. பதிலாசிரியர் கிடைக்காதவிடத்து ஆசிரியர்களை விடுவிக்கத் தேவையில்லை. இத்தனை வருட சேவையை முடித்தவர்களிற்கு இடமாற்றம் வழங்கப்படும் என ஒரு ஒப்பந்தம் எழுதி ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளின் ஒப்பந்தத்தையும் பெற்று வைத்திருக்க வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 12. | பாடசாலை விஜயம் தொடர்பாக | பாடசாலை விஜயத்தினை ஒழுங்காக செய்யும்படி செயலாளர் கேட்டுக்கொண்டார். பாடசாலை விஜயத்தின் போது என்னென்ன வைத்திருக்க வேண்டும் என்ற விபரங்கள் அடுத்த கிழமை அனைத்துப் பாடசாலைகளிற்கும் அனுப்பி வைக்கப்படும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | பாடசாலை அதிபர்கள் அவற்றினை தயாரித்து தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.வலயக் கல்வி அலுவலகங்களினாலும் பாடசாலை விஜயம் ஒழுங்காக செய்யப்பட வேண்டும். | |
| 13. | சிறு திருத்தச் செலவு (MRC) தொடர்பாக | சிறு திருத்தச் செலவிற்கு (MRC) தரப்பட்ட நிதி இன்னும் முடிவடையவில்லை. திருத்த வேலைகளிற்கு (Repair Work) பயன்படுத்தப்படவில்லை. அடுத்த வருடம் நிதி வலயக் கல்வி அலுவலகங்களிற்கு விடுவிக்கப்பட மாட்டாது. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |

**இத்துடன் கூட்டம் பிற்பகல் 2.45 மணிக்கு கூட்டம் நிறைவு பெற்றது.**

இ.இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**